


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.2.2026) சென்னையில் நடைபெற்ற, மு.அ.மு. அருணாசலம் முருகப்பன் அவர்களின் மகள் வேதிகா மெய்யம்மை சாஹில் ஆகியோரது திருமண விழாவில் கலந்துகொண்டு மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி, மணமக்களை வாழ்த்தினார். உடன் திருமதி துர்கா ஸ்டாலின் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; மலேயா நாட்டுக்குச் சென்றுள்ள பிரதமர் மோடி, தமிழ்க் கலாச்சாரம் உலகளாவியது - உலகுக்கு இந்தியா வழங்கிய பரிசு தமிழ் - திருவள்ளுவர் மையம் ஒன்றை மலேயாவில் உருவாக்குவோம் - என்றெல்லாம் பேசி இருக்கிறாரே ?

**பெரியதம்பி :** **ஆமாம் தம்பி; தமிழ் மொழி வளர்ச்சிக்கு எதுவும் செய்யாமல்; உலக வழக்கு அழிந்து ஒழிந்த ஆரியத்தின் மொழியான சமஸ்கிருத மொழி வளர்ச்சிக்கு வெண்ணையையும், தமிழ் வளர்ச்சிக்குச் சுண்ணாம்பையும் கொடுத்துவிட்டு; தமிழ் மொழியை ஒன்றிய ஆட்சி மொழிகளில் ஒன்றாக ஆக்குவது ஒருபுறம் இருந்தாலும், திருக்குறளை தேசிய நூலாக அறிவித்திடக் கூட மனமில்லாமல்; மலேயாவிற்குப் போய் பிரதமர் வாயால் வடை சுட்டிருப்பதை, உலகத்தமிழர்கள் யாரும் குறிப்பாக மலேயா தமிழர்கள் நிச்சயம் புரிந்து கொண்டு, நிராகரிப்பார்கள் !**

### பிப். 12 – அன்று ஆர்ப்பாட்டம்!

# ம.தி.மு.க.வினர் திரளாகப் பங்கேற்பு!

## ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அறிக்கை!



சென்னை, பிப். 10 –

தமிழ்நாட்டை வஞ்சிக் கும் ஒன்றிய அரசின் பட் ஜெட்டைக் கண்டித்து பிப்ரவரி 12ல் நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் ம.தி.மு.க.வினர் திரளாக கலந்து கொள்ளுமாறு ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இது குறித்து வைகோ அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

ஒன்றிய அரசின் வரவு செலவு திட்டத்தில் தமிழ் நாட்டிற்கு புதிய திட்டங்கள் எதுவும் அறிவிக்கப்படாமல், பாரபட்சமாக நிதி ஒதுக்கீடு செய்து ஒன்றிய பா.ஜ.க .அரசு தமிழ்நாட்டை வஞ்சித்து இருக்கிறது.

மாநிலங்களின் பங்களிப்பை உரிய முறையில் 16 ஆவது நிதிக் குழு அங்கீக ரிக்க முற்பட்ட போதும், நாட்டின் இரண்டாவது பெரிய பொருளாதாரத்தைக் கொண்டு, இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப் பைச் செலுத்தி வரும் தமிழ்நாட் டிற்கு மற்ற வளர்ச்சியடைந்த மாநிலங்களைக் காட்டிலும் நிதிப் பகிர்வு சதவீதம் குறைக் கப்பட்டு இருப்பது தமிழ் நாட்டுக்கு செய்யப்பட்டு இருக்கும் பச்சை துரோகம் ஆகும்.

உத்தரப்பிரதேசத்திற்கு 2 லட்சத்து 68 ஆயிரத்து 910 கோடிரூபாய், பீகார் மாநிலத் திற்கு 1 லட்சத்து 51ஆயிரத்து 831 கோடி ரூபாய், மத்தியப் பிரதேசத்திற்கு 1லட்சத்து 12 ஆயிரத்து 133 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருக் கும் பா.ஜ.க. அரசு. தமிழ்நாட்டிற்கு வெறும் 62ஆயிரத்து 530 கோடி ரூபாய் மட்டுமே நிதி வழங்கி இருக்கிறது. தமிழ்நாட்டிற்கான வரிப்

பகிர்வு 4.097 விழுக்காடு என்ற மிகச்சொற்ப அளவிலேயே அடுத்த ஐந்தாண்டுகளுக்கு இருக்கும். இதனால் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தமிழ்நாட்டிற்கு ஆண் டிற்குச் சுமார் 5,000 கோடி ரூபாய் நிதி இழப்பு ஏற்படும்.

சரக்கு மற்றும் சேவைவரி விதிப்புச் சீரமைப்பில் மாநிலங்களுக்கான நிதி வருவாய் பாதிக்கப் பட்டிருக்கும் நிலையில் இந்த ஆண்டு தமிழ்நாட்டிற்கான ஒன்றிய வரிகளின்பங்கு சுமார் 1,200 கோடி ரூபாய் அளவில் குறைக்கப்பட் டுள்ளது என் பதும் கண்டிக்கத்தக்கது ஆகும்.

மும்மொழிக் கொள்கையைக் கடைப்பிடிக்காததன் காரணமாக அனைவருக்கும் கல்விதிட்டத்திற்கான 3,548 கோடி ரூபாய், தமிழ்நாடு ஜல் ஜீவன் திட்டத்தை நாட்டிலேயே சிறப்பாகச் செயல் படுத்திய போதிலும் ஒன்றிய அரசு இன்னும் விடுவிக்காத நிதி 3,112 கோடி ரூபாய் நிதி குறித்தும் எந்த அறிவிப்பும் பட்ஜெட்டில் இல்லை.

ஜல்ஜீவன் குடிநீர்த் திட் டத்திற்கு 2025–26ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மதிப்பீட்டில் 67 ஆயிரம்

கோடி ரூபாயாக இருந்த நிதி ஒதுக்கீடு, தற்போது திருத்திய மதிப்பீட்டில் வெறும் 17 ஆயிரம் கோடி ரூபாய் என ஒதுக்கப்பட்டிருப்பது இந்தத் திட்டத் தையே முழுவதுமாக முடக்குவதற்கான முயற்சியாகும்.

மதுரை, கோவை, மெட்ரோ ரெயில், திட்டங் களை முற்றிலுமாக ஒன்றிய அரசு புறக்கணித்து இருக்கிறது. தமிழ்நாட்டிற்கான ரெயில்வே திட்டங்களுக்கு போதிய நிதி ஒதுக்கீடு செய்யாமல்ஒன்றிய அரசு பாரபட்சமாக செயல்படுகிறது. வழக்கமாக நிதியமைச்சர் திருக்குறளை மேற்கோள் காட்டி பட்ஜெட் உரையை தொடங்குவார். ஆனால் இந்த முறை அதையும் விட்டு விட்டார்.

சட்டமன்றத் தேர்தலை தமிழ்நாடு எதிர்நோக்கியுள்ள போதும் ஒன்றிய பா.ஜ.க .அரசு, பெயரளவுக்கு கூட தமிழ்நாட்டிற்கு திட்டங்களை அறிவிக்க முன்வரவில்லை.

தொடர்ந்து தமிழ் நாட்டை புறக்கணிக்கும் ஒன் றிய பா.ஜ.க. அரசை கண்டித்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில், பிப்ரவரி 12ஆம் தேதி தமிழ்நாடு முழுவதும் ஒன்றிய, நகரங்களில் நடைபெற உள்ள கண்டன ஆர்ப்பாட்டத்தில் மறுமலர்ச்சி தி.மு.க. நிர்வாகி கள் தொண்டர்கள் பெருமளவில் பங்கேற்க வேண்டும். கழக மாவட்ட செயலாளர்கள் ஆர்ப்பாட் டத்தை ஒருங் கிணைத்து வெற்றி பெற செய்ய முன்வர வேண்டும்.

இவ்வாறு வைகோ அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நடைபெற்ற ”வெல்லும் தமிழ் பெண்கள் ஆலோசனைக் கூட்டத்தில் பெண்களின் உரிமையை நிலைநாட்டிய முதலமைச்சர் ஆட்சி தொடர நாம் அனைவரும் ஒன்றிணைந்து பாடுபட வேண்டும் என மாவட்டச் செயலாளர் மதியழகன் எம் எல் ஏ சிறப்புரையாற்றினார். இந்த கூட்டத்தில் மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், மாநில மகளிர் ஆணைய உறுப்பினர் மருத்துவர் மாலதி நாராயணசாமி, மாநில வர்த்தக அண துணை செயலாளர், அன்பரசன் , மாவட்ட துணை செயலாளர் சாவித்திரி கடலரசு மூர்த்தி, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் லட்சுமிபிரியா, தொகுதி பொறுப்பாளர்கள் கிருஷ்ணகிரி புஷ்பா ,ஊத்தங்கரை சுமித்ரா தவமணி, நகர பொறுப்பாளர்கள் அஸ்லாம் வேலுமணி உள்ளிட்ட நிர்வாகிகள், மகளிர் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### உள்ளூர் கலாச்சாரத்தை பாதுகாத்து மேம்படுத்த

# தருமபுரி மாவட்டத்தில் ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

## மக்களவையில் ஆ.மணி கேள்வி!

புதுடெல்லி, பிப்.10 -

தருமபுரி மாவட்டத்தில் உள்ளூர் கலாச்சாரத்தை பாதுகாத்து மேம்படுத்தும் வகையில் மாவட்டத்தில் உள்ள பாரம்பரிய தலங்கள்,நாட்டுப்புற கலைகள்,மரபுகள்,பழங்குடியின கலாசார நடைமுறைகள் போன்றவற்றை மத்திய கலாச்சார பாதுகாப்பு திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசு அடையாளம் கண்டு அதை ஆவணப்படுத்தி உள்ளதா?

கடந்த 3 ஆண்டுகளில் உள்ளூர் கலாச்சாரத்தை பாதுகாத்து மேம்படுத்தி,ஆவணப்படுத்தும் நோக்கில் ஒன்றிய அரசால் அனுமதிக்கப்பட்டுள்ள திட்டங்களின் எண்ணிக்கை மற்றும் அதற்காக விடுவிக்கப்பட்டுள்ள நிதியின் விவரங்கள் என்ன?

தருமபுரி மாவட்டத்தில் கலாச்சார உள்கட்டமைப்பை உருவாக்கிடும் வகையில் அருங்காட்சியகங்கள்,கைவினை குழுக்கள்,கலாச்சார மையங்கள்



ஏதேனும் ஒன்றிய அரசால் முன்மொழியப்பட்டுள்ளதா?

கலாச்சார பாதுகாப்பை சுற்றுலாவுடன் இணைத்து உள்ளூர் சமூகங்களுக்கு நிலையான வருமானத்தை உருவாக்கிடும் வகையில் ஒன்றிய அரசால் இது வரை எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்,எடுக்கப்பட உள்ள நடவடிக்கைகளின் விவரங்கள் என்ன? என்று மக்களவையில் கலாச்சாரம் மற்றும் சுற்றுலா துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷேகாவத்திடம் தருமபுரி எம்பி. வழக்கறிஞர். ஆ. மணி கேள்வி எழுப்பி உள்ளார்.

### அமைச்சர் முனைவர் கோவி.செழியன், மாவட்டப் பொறுப்பாளர் க.அன்பழகன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

# கும்பகோணம் மாநகர, பகுதி கழகங்களில் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாநகரக் கழகச் செயலாளர் சு.ப.தமிழழகன் அறிக்கை!

தஞ்சாவூர், பிப்.10 –

தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் மாநகரத்திற்கு உட்பட்ட பகுதி கழகங்களில் பொது உறுப்பினர்கள் கூட்டங்கள் நடைபெற உள்ளதாக மாநகரக் கழக செயலாளர் சு.ப.தமிழழகன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு: கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணக்க கும்பகோணம் மாநகரத்திற்கு உட்பட்ட நான்கு பகுதி கழகங்களிலும் கீழ்க் கண்ட வாறு பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற உள்ளது.

இன்று (10.02.2026) காலை 11.00 மணியளவில் கும்பகோணம் அசூர் பைபாஸில் உள்ள ஏபி மஹாலில் பகுதி 1 பொது உறுப்பினர்கள் கூட்டமும், மாலை 6 மணி அளவில் கும்பகோணம், சீனிவாச நகரில் உள்ள சங்கம் மகாலில் பகுதி 4 பொது உறுப்பினர்கள் கூட்டமும், 11.02.2026 காலை 11.00 மணிக்கு தாராசுரம் மாதவன் சீதை அம்மாள் திருமண மண்டபத்தில் பகுதி 3 பொது உறுப்பினர்கள் கூட்டமும், மாலை 6:00 மணி அளவில் கும்பகோணம், மோதிலால் தெருவில் உள்ள கே.எம் திருமண மஹாலில் பகுதி 4 பொது உறுப்பினர்கள் கூட்டமும் நடைபெற உள்ளது.

இக்கூட்டங்களில் அமைச்சர் முனைவர் கோவி. செழியன், மாவட்ட கழக பொறுப்பாளர் சாக்கோட்டை அன்பழகன், கழக சட்டத் திட்ட திருத்த குழுத் தலைவர் சு. கல்யாணசுந்தரம் எம்.பி, முன்னாள் எம்.பி செ.இராமலிங்கம் ஆகியோர் பங்கேற்க உள்ளனர்.

அது சமயம் மேற்கண்ட கூட்டங்களில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர், பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர கழக நிர்வாகிகள், மண்டலக் குழு தலைவர்கள், நிலைக்குழு தலைவர்கள். வட்ட கழக செயலாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட கழக பிரதிநிதிகள், வட்ட கழக நிர்வாகிகள், BLA2, BDA, BLC க்கள் சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

கூட்டத்தின் பொருள்.

1. மார்ச் 1. மாண்புமிகு தமிழ் நாடு முதல்வர் கழகத்தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழா

2. ஸ்டாலின் தொடரட்டும், தமிழ் நாடு வெல்லட்டும் மார்ச் 8 திருச்சி, மாநில மாநாடு

3. வெல்லும் தமிழ்ப் பெண்கள் பரப்புரை பிப்ரவரி

4. தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரை கூட்டம் கும்பகோணம் தொகுதி 28.02.2026

5. கழக ஆக்கப்பணிகள்

இவ்வாறு கும்பகோணம் மாநகரக் கழக செயலாளர் சு.ப.தமிழழகன் அறிக்கை வெளியிட்டுள்ளார்..



தர்மபுரி மேற்கு மாவட்டம் பாலக்கோடு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட சொட்டான்டஅள்ளி கிராமத்தைச் சேர்ந்த கட்டிடத் தொழிலாளி சின்னசாமியின் மகள் செல்வி பிரபா(வயது11) ஆசிய அளவில் நடைபெற்ற சிலம்பம் போட்டியில் நேபாளம் காத்மாண்டில் கலந்து கொண்டு தங்கப்பதக்கம் வென்று தமிழ் நாட்டின் பெருமையை நிலை நிறுத்தியுள்ளார்.அவருக்கு ஊக்கமளிக்கும் வகையில் தி.மு.க. மேற்கு மாவட்ட செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் ஆலோசனைப்படி தி.மு.க. மாநில விவசாய அணி துணைச் செயலாளர் சூடப்பட்டி.சுப்பிரமணி தனது சொந்த நிதியில் இருந்து ரூ.25,000 த்தை வழங்கினார்.உடன் பாலக்கோடு சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் டி.எம்.அரியப்பன்,முன்னாள் ஒன்றிய செயலாளர் இல.கிருஷ்ணன் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### சுற்றுச் சூழலைப் பாதுகாக்க

# பருவநிலை மாற்ற தடுப்பு நடவடிக்கைகளுக்கு, அரசின் பங்களிப்பு என்ன?

## மாநிலங்களவையில் எஸ்.ஆர்.சிவலிங்கம் கேள்வி!

புதுடெல்லி, பிப். 10 -

திராவிட முன்னேற்றக் கழக, மேலவை உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் அவர்கள் 06 ஜனவரி 2026 அன்று மாநிலங்களவையில் சுற்றுச் சூழலைப் பாதுகாக்கவும், பருவநிலை மாற்ற தடுப்பு நடவடிக்கைகளுக்கும், உரிய பங்களிப்பை இந்திய அரசு அளித்து வருகிறதா? என்றும், பாரீஸ் ஒப்பந்தத்தின்படி, வளர்ந்த நாடுகளின் நிதயளிப்பு உறுதி செய்யபட்டுள்ளதா? என்றும், தேசிய பருவநிலை மாற்ற நிதியத்தை வலுப்படுத்த ஒன்றிய அரசு முன்முயற்சிகளை மேற்கொண்டுள்ளதா? என்றும் இதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும் ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல் துறையின் இணையமைச்சர் கீர்த்தி வரதன் சிங் அவர்களிடம் கேள்வியை எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல் துறையின் இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில் வருமாறு:

ஐக்கிய நாடுகள் சபையின் 30வது பருவநிலை மாற்ற மாநாட்டில் பிரேசில் நாட்டின் பேலம் நகரில் கடந்த நவம்பர் 2025, இந்திய அரசு பங்கேற்றது. இந்தியா உள்பட வளர்ந்து வரும் நாடுகளில் உயிர்களைப் பாதுகாக்கவும், வாழ்வாதாரத்தை பாதுகாக்கவும், சுற்றுச் சூழலை பாதுகாக்கவும் வேண்டிய தன் அவசியத்தை ஒன்றிய அரசு சுட்டிக்காட்டி யுள்ளது என்றும்,2025 ஆண்டிலிருந்து 2035க்குள்,

தேசிய பருவநிலை மாற்ற நிதி யத்தின் அளவை மூன்று மடங்காக உயர்த்த வேண்டும் என்றும், இதற்கென வளர்ந்த நாடுகளின் பங்களிப்பை உயர்த்த வேண்டும் என்றும், வளர்ந்து வரும் நாடுகள், அதிகமாக பாதிக்கப்படுவதால். அவற்றை உடனடியாக பாது காக்க வேண்டியது வளர்ந்த நாடுகளின் கடமையாகும் என்றும் ஒன்றிய அரசு வலியுறுத்தியுள்ளது என இணைய



மைச்சர் மாநிலங்களவையில் தெரிவித்தார்.

மேலும், பாரீஸ் ஒப்பந்தப்படியும் விதி எண் 9.1ன் படியும், வளர்ந்த நாடுகளின் நிதியளிப்பு, தேசிய பருவநிலை மாற்ற நிதியத்திற்கென வழங்கப்பட வேண்டும் என்றும், இந்தியா உள்பட,வளர்நது வரும் நாடுகளின் சுற்றுச் சூழல் பாதுகாப்பிற்கும் பருவநிலை மாற்ற தடுப்பு நடவடிக்கைகளுக்கும் வளர்ந்த நாடுகள் உடனடியாக உதவ வேண்டும் என்று ஒன்றிய அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது என்றும் சர்வதேச நிலைமை, ஒன்றிய அரசின் தன்னிறைவு திட்டம்,வளர்ச்சித் திட்டங்கள் அனைத்து இனக்குழுக்களின் பாதுகாப்பு ஆகிய அனைத்து முன்னுரிமைகளுக்கும் சமமான நிலையை பாதுகாக்கும் வகையில், ஒன்றிய அரசு ஐக்கிய நாடுகள் சபையின் 30வது பருவநிலை மாற்ற மாநாட்டில் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளது என்று இணையமைச்சர் கீர்த்தி வரதன் சிங் விரிவான பதிலை அளித்துள்ளார்.



தர்மபுரிமாவட்டம், பெண்ணாகரம் சட்டமன்றத் தொகுதி ஒருங்கிணைப்பாளர் எம்.முனியப்பன் இல்லத் திருமண விழாவில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.என்.பி.இன்பசேகரன் தலைமையேற்று திருமணத்தை நடத்தி வைத்து வாழ்த்தினார். இதில் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.